

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தெற்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்– புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி–18," தகுதியால் தலைவரானவர்! தத்துவத்தில் உறுதியானவர்!! எனும் தலைப்பில், மாபெரும் பொதுக்கூட்டம் 14.06.2026 அன்று பகுதி செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி. தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., கழக மருத்துவ அணி;r செயலாளர் டாக்டர் நா.எழிலன், திராவிடர் கழக துணை பொதுச்செயலாளர் சே.மெ.மதிவதனி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் பகுதிச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல், பி.கே.மூர்த்தி எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி., எல்.பி.எஃப் மோகன், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, எம்.சிவி.ரமேஷ் (ஏ) நீலகண்டன் எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### 'தன்னார்வத் தொண்டு அமைப்பு' என்ற முகமூடியுடன் தொடங்கப்பட்டதுதான் ஆர்,எஸ்,எஸ்,!

# 'ஜாதிப் பிரச்சினை' குறித்து ஆதாரப்பூர்வமாக எழுதியதற்கு மறுப்பு என்ன?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!

சென்னை, ஜூன் 17–

'தன்னார்வத் தொண்டு அமைப்பு' என்ற முகமூடியுடன்தான் தொடங்கப்பட்டது தான் ஆர்.எஸ்.எஸ்.! ஆர்.எஸ்.எஸ்.சில் இருக்கும் 'ஜாதிப் பிரச்சினை' குறித்து அதிலிருந்தோரே ஆதாரப்பூர்வமாக எழுதியதற்கு மறுப்பு என்ன? வாய்ப் பறை கொட்டினால் ஏமாந்துவிடுவார்களா, மக்கள்? என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஆர்.எஸ்.எஸ். தலைவர் கூறுகிறார்!

"ஆர்.எஸ்.எஸ். பற்றி சரியான புரிதல் இல்லை; உலகிலேயே மிகப்பெரிய தன்னார்வ அமைப்பாக ஆர்.எஸ்.எஸ். திகழ்கிறது. அதேசமயம் அதிகம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட அமைப்பாகவும் இருக்கிறது. வெளியிலிருந்து பார்ப்பவர்கள், ஆர்.எஸ்.எஸ்.சைத் தவறான கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றனர். அதன் நூற்றாண்டைக் கொண்டாடும் இந்த வேளையில், ஆர்.எஸ்.எஸ்.பற்றி மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ்.சை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், அதற்குள் வந்து, அதன் உள் விவகாரங்களை உற்று நோக்கவேண்டும்" என்பதாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன் பாகவத் அவர்கள் கேரளம் மாநில திருவனந்தபுரத்தில் மூன்று நாள்களுக்கு முன்பு (12.6.2026) நடைபெற்ற அதன் நூற்றாண்டுக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்!

"ஆர்.எஸ்.எஸ்.பற்றி சரியான புரிதல் இல்லை" என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் கூறுகிறார்!

அதையே தான் நாமும், அவருக்குப் பதிலாகக் கூறுகிறோம். ஆம்! ஆர்.எஸ்.எஸ். அவர் கூறுகிறபடி, வாதத்திற்காக உலகிலேயே பெரிய முதன்மை அமைப்பாக இருப்பதாக அவர் கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் கூட, அப்படி இருப்ப தற்குக் காரணம், அதன் உண்மைகளைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ளப் படாததால், இன்னமும் பாம்பைப் பழுதை (கயிறு) என்று நம்பி, கால் வைத்து, கடிபடும் போன்ற நிலைதானா?

**தன்னார்வத் தொண்டு அமைப்பு என்ற முகமூடி!**

1925 இல் ஆர்.எஸ்.எஸ்.



இயக்கம் புனேவில் டாக்டர் ஹெட்கேவர் போன்றவர்களால் "தன்னார்வத் தொண்டு" அமைப்பு என்ற போர்வை – முகமூடியுடன் தான் தொடங்கப்பட்டது.

அது தொடங்கப்பட்ட காலம் முதற்கொண்டு, 100 ஆண்டு கொண்டாடும் இன்றைய கால கட்டம்வரை ஹிந்து மதத்தைக் காப்பாற்றி, ஹிந்துத்துவக் கொள்கைகளை முன்னிறுத்தி, 'ஹிந்து ராஷ்டிரத்தையே' நிறுவி, பன்மதங்கள், பல மொழிகள், பல கலாச்சாரங்கள் உள்ள ஒரு பரந்த இந்திய நாட்டில், அவற்றை நீக்கி, ஹிந்து நாடு என்று ஆக்கிடத் துடியாய்த் துடித்துக் கொண்டுள்ளது யதார்த்த நிலை. "தன்னார்வத் (Voluntary Organization) தொண்டு" செய்யும் அமைப்பில், ஜாதி, மதம், முன்னுரிமை, முதலிடம் பெற்றது மட்டுமல்லாமல், ஏகபோகமாக ஒரு ஜாதியின் தன்மையே தொடருவது ஏன்? எப்படி?

1. ஹெட்கேவர் 2. எம்.எஸ். கோல்வால்கர் 3.பாலாசாகேப் தேவரஸ்

4. ராஜேந்திர சிங் (ராஜூ பையா) பார்ப்பனரல்லாதவர் (சில காலம் மட்டும்) 5. மோகன் பாகவத்

இப்படி உயர்ஜாதி பார்ப்பனத் தலைமையே தொடர்ந்து (நியமனம் மூலம்) இருப்பது எப்படி அமைகிறது? அதுவும், நியமன முறைத் தலைமையுள்ள ஓர் அமைப்பில், யாரையும்கூட நியமிக்க வாய்ப்பு எளிதில் உள்ள நிலையில், எப்படி அமைகிறது?

மகாராட்டிராவில், புனே போன்ற பகுதிகளில் அதிகம் வசிக்கும் 'சித்பவன்' பிரிவைச் சேர்ந்த பார்ப்பனர்களால் தொடங்கப்பட்டபோதே, "தன்னார்வம்" என்று பொருள்படும் 'ஸ்வயம்சேவக்' என்பதைத் தலைப்புப் பெயராக அமைக்க வேண்டிய அவசியம் அதற்கு ஏன் ஏற்பட்டது தெரியுமா?

**ஜோதிபாபூலே – சாவித்திரிபாய் பூலே!**

அதற்குமுன் அங்கே, ஜோதி பாபூலே, 'சத்யசோதக் சமாஜ்' என்ற அமைப்பினை, சமூகநீதிக்கும், சமத்துவத்திற்கும் ஆதரவாகவும், ஜாதி வர்ண தர்மத்திற்கு எதிராகவும், பெண்ணடிமைக்கு எதிராகவும் உருவாக்கினார். அவரது துணைவியார் சாவித்திரிபாய் பூலே ஆசிரியராகி, பெண்களுக்குக் கல்வி தந்தார். அந்த அமைப்பு, சமத்துவப் பண்பாட்டுப் புரட்சியை விதைத்து – மனு தர்மத்தின் வர்ணாஸ்ரமத்தின் முதுகெலும்பை முறிக்கும் வண்ணம், திருமணம் போன்ற நிகழ்வுகளில்கூட பார்ப்பனர்களை அழைக்காமல் செய்ததின்மூலம் "சூத்திர, ஆதிசூத்திர" ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு வசதியாக ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தைக் கட்டி எழுப்பினர்.

ஹிந்து மகாசபை செல்வாக்கிழந்தது. திலகர் போன்ற ஜாதி ஒழிப்புக்கு எதிராகவும், பெண்கள் கல்வி உரிமைக்கு எதிராகவும் பேசி வந்த தேசியப் போர்வையாளர்களின் செல்வாக்குச் சரிந்து வந்ததாலும், சுயமரியாதை இயக்கத்திற்கு ஈடான சத்யசோதக் சமாஜ் (உண்மை நாடுவோர் இயக்கம்) மராத்திய மன்னர் சத்திரபதி சாகுமகராஜ் போன்றவர்களின் எழுச்சிமிகு பேராதரவுடன் வளர்ந்து, ஆரியப் பார்ப்பனிய ஆதிக்கம் சரிந்து வந்ததைச் சரிகட்டவே 'ஹிந்து மகா சபை' என்று ஒரு பக்கம் வைத்துக்கொண்டே, ராஷ்ட்ரீய சுயசேவக் சங்கம் என்ற ஒரு முகமூடியுடன் 'இந்துத்துவா' என்ற ஓர் அரசியல் திட்டத்தை வி.டி.சவார்க்கார் போன்றவர்கள் உருவாக்கினர். அவரும் சித்பவன் பார்ப்பனரே! காந்தியாரைக் கொலை செய்த, நாதுராம் விநாயக் கோட்சேயும் அதே சித்பவன் பிரிவைச் சார்ந்தவர்தான்!

அந்தத் தத்துவத்தினைத் தங்களது மூலக் கொள்கை லட்சியமாக்க எப்படி ஒரு "தொண்டு நிறுவனம்" இயங்குவது சரியானது?

**தாழ்த்தப்பட்டவர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள்?**

தொண்டில், ஜாதி இல்லை என்று கூறும் இவர்கள், "தாழ்த்தப்பட்டவர்களை" எப்படி, உள்ளும், புறமும் நடத்தினார்கள் என்பதை, அதில் 30 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றிய, குஜராத், கேரளம், கருநாடகம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்த பலரும் வெளியே வந்து, புத்தகங்களை எழுதி, அம்பலப்படுத்தி இருக்கிறார்களே! அதற்கு ஆதாரப்பூர்வமாக ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் மறுப்புகள் எழுதியுள்ளனரா?

**மூன்று முறை தடை செய்யப்பட்ட அமைப்பு!**

உண்மையான ஒரு தொண்டு நிறுவனமானால், அது ஏன் மூன்று முறை ஒன்றிய அரசால் தடை செய்யப்பட்டது? தடை செய்யப்பட்டே ஆக வேண்டிய அவசியம் என்ன?

'தடை நீங்கி தானே ஆட்சியை அமைத்துள்ளோம்' என்று இன்று கூறுகின்றனர். மூன்று முறை அவர்களது தலைவர்கள் நிபந்தனை களை ஏற்றுத்தானே, தடையை நீக்கிக் கொண்டார்கள். அதிலும் தமிழ்நாட்டு காஞ்சி சங்கராச்சாரியாரின் முயற்சியால், பார்ப்பனர் ஒருவரின் இடைவிடாத ஈடுபாட்டால் முதல் தடை நீக்கம் பெற்றது என்பதை மறுக்க முடியுமா?

தொண்டு நிறுவனம் என்றால், அது அரசியல் பிரிவை ஏற்படுத்தி, ஆட்சியை தன்வயப்படுத்த அதன்மூலம் அது பன்முகத்தினை மாற்றிட முடியுமா?

எனவே, இவர்களை "ஆரிய வர்க்கத்தினர்" ஏற்றிருந்தாலும் கூட, தென்னாட்டுத் திராவிடத்தில், அதன் சுய உருவத்தை, அடிக்கடி மாற்றிக் கொள்ளும் உருமாற்றத்தைச் (Metamorphosis) சரியாகப் புரிந்ததால்தான் 'அந்த முகமூடி அகற்றப்பட்டு', மக்கள் அதுபற்றிய புரிதலுக்கு ஆளாகி, அதனைக் காலூன்றவிடாமல், கவனமாகத் தங்களது நிலைப்பாட்டை உறுதிப்பாட்டுடன் வைத்துள்ளனர்!

இந்த நூற்றாண்டு வரலாற்றில், அது எடுத்த "அவதாரங்களை" மக்களிடம் கொண்டு செல்ல – அரசியல் வேட்கை, வாக்கு வங்கி அரசியலைத் தாண்டிய, இலட்சிய நோக்குள்ள இயக்கங்கள் பல ஏற்பட்டு, அதன் பாசிச பச்சையான உண்மைகளைப் பாருக்கும் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

**தன்னார்வத் தொண்டு நிறுவனம் என்றால், ஏன் 'ரகசியம்?' ஏமாந்துவிடுவார்களா, மக்கள்?**

உள்ளே வந்து பார்க்க வாய்ப்பு, அங்குள்ள பெண்களுக்கே கிடையாதபோது, மற்றவர்களுக்கு எப்படி கிடைக்கும்? 'வாய்ப் பறை' கொட்டினால் ஏமாந்துவிடுவார்களா, மக்கள்? அதுமட்டுமா? பதிவு செய்யப்படாத அமைப்பாக நீடிக்க லாமா, ஒரு தொண்டு நிறுவனம்? புரிந்து கொள்ளுங்கள்.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 5 குழந்தைகளுக்கு ஒரே நாளில் கொடூரமான குற்றங்கள் அரங்கேற்றம்!

# பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு தர கையாலாகாத த.வெ.க. அரசு!

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி கண்டனம்.

சென்னை, ஜூன் 17–

கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் – மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் தவெக ஆட்சியில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது முற்றிலும் கேள்விக்குறியாகி, சட்டம் ஒழுங்கு முற்றிலுமாகச் சீர்குலைந்துள்ளதை கண்டிக்கிறோம். தமிழக வரலாறு கண்டிராத வகையில், பிஞ்சுச் சிறார்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளும், கொடூரக் கொலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வது ஒட்டுமொத்த சமூகத்தையும் தலைகுனிய வைத்துள்ளது.

தமிழினத்தலைவர் கலைஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலேயே முதல்முறையாகப் பெண் காவலர்கள் படை உருவாக்கப்பட்டு 'சிங்கப் பெண்கள்' என அவர்கள் வீறுநடை போட்டதும், அதனைத் தொடர்ந்து முன்னாள் முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டதும் நாம் அறிந்ததே. ஆனால், இன்றைய தவெக ஆட்சியில், தமிழ்நாடு தடம் மாறி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களின் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறதோ என்ற பலத்த ஐயம் எழுந்துள்ளது.

ஒரே நாளில் நடந்த கொடூரம் 15 ஜூன் 2026 மிகக் கொடூரமான குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அரங்கேரி உள்ளது. கும்மிடிப்பூண்டி 3 வயது பச்சிளம் குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். பூந்தமல்லி 7 வயது சிறுமி பாலியல் ரீதியாக வன்கொடுமை செய்யப்பட்டுள்ளார். தாம்பரம் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். சென்னை தலைநகரிலேயே 12 வயது சிறுமிக்கு பாலியல் சீண்டல் நடந்துள்ளது.

ஒரே நாளில் ஒரே பிராந்தியத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் 5 சிறுமிகள் போக்சோ (POCSO) சட்டத்தின் கீழ் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகியிருப்பது, த.வெ.க. அரசின் கீழ் காவல்துறை எவ்வளவு மெத்தனமாகவும், செயலிழந்தும் கிடக்கிறது என்பதற்கு மிகத் தெளிவான சான்றாகும்.

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினந்தோறும் வரும் செய்திகள் நெஞ்சைப் பதற வைக்கின்றன. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் காவல் நிலையங்களை அணுகினாலும், ஆளுங்கட்சியான தவெகவின் கடுமையான அரசியல் அழுத்தங்கள் காரணமாகப் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளில்கூட, குற்றவாளிகளுக்குப் பின்னணியாக இருக்கும் அரசியல் செல்வாக்கின் காரணமாகக் கைது நடவடிக்கைகள் திட்டமிட்டே தாமதப்படுத்தப் படுவதாகத் தெரிகிறது.

தேசிய மற்றும் மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் நல ஆணையம் உடனடியாக இவ்விஷயத்தில் தன்னிச்சையாக (Suo Motu) நேரடியாகத் தலையிட்டு, தமிழகத்தில் நிலவும் அவல நிலையை ஆய்வு செய்து குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். காவல்துறை எவ்வித அரசியல் அழுத்தங்களுக்கும் பணியாமல், பதியப்படாத அனைத்துப் புகார்கள் மீதும் உடனடியாகப் போக்சோ மற்றும் உரிய கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதி கிடைக்க, வழக்குகளை விரைவு நீதிமன்றங்கள் மூலம் விசாரித்து, குற்றவாளிகளுக்குக் கடுமையான, முன்மாதிரியான தண்டனைகளைப் பெற்றுத் தர அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் விளம்பரங்களுக்கும், சுயலாபங்களுக்காக கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தவெக Reels அரசு உடனடியாகக் கைவிட்டு, தமிழகத்தில் வாழும் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் உயிரையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் துவக்க விழா!

## கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை தலைமை!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார்!

தென்காசி ஜூன்17-

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் (வட்டாட்சியர் அலுவலகம் அருகில்) துவக்க விழா நிகழ்வு கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை தலைமையில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு கலை கதிரவன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன் கான், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தென்காசி முன்னாள் மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் மா.செல்லத்துரை, முன்னாள் எம்.பி. தனுஷ் குமார்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், கடையநல்லூர் எம்எல்ஏ தி.மு.ராசேந்திரன்,தொழிலதிபர் ஆர். கே.காளிதாசன், தென்காசி தெற்கு மாவட்ட அவைத் தலைவர் மாவடிக்கால் சுந்தரமகாலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்துப்பாண்டி, சேக்தாவூது, சீனிவாசன், ஆறுமுகச்சாமி, ஆ.பிரபாகரன்,

முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் காசி தர்மம் துரை, மாவட்டப் பொருளாளர் ஷெரீப், பொதுக்குழு உறுப்பினர்கள் இராஜேஸ்வரன்,சாமித்துரை, ரஹீம், தமிழ்ச் செல்வி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆயான் நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கென்னடி,

கனிமொழி, ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், ரமேஷ்,அன்பழகன், சீனித்துரை, திவான்ஒலி, ரவிசங்கர், சேசுராஜன், பொன்செல்வன், சுரேஷ், ஷேக் முகமது, ஜெயா, மணிகண்டன், நகர செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், பீரப்பா, கணேசன்,பேரூர் செயலாளர்கள் குற்றாலம் குட்டி, முத்தையா, பண்டாரம், முத்து, ராஜராஜன், வெள்ளத்துரை, தங்கப்பா, சிதம்பரம், கோபால்,

தலைமைப் பேச்சாளர் இஸ்மாயில், தென்காசி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் ஷேக்அப்துல்லா, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், நகர்மன்ற துணைத் தலைவர் கே.என். எல்.சுப்பையா,

மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, வக்கீல் வேலுச்சாமி, முத்துக்குமார், கோமதிநாயகம், இஞ்சி இஸ்மாயில்,இசக்கிப்பாண்டியன், கடையநல்லூர் முருகன்,

மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் பாலாமணி, ராஜேந்திரன், சங்கரன்வாத்தியார்,

சண்முகநாதன், ஜீவானந்தம்,

ஐவேந்திரன்தினேஷ், சூர்யாமணி என்ற ஈஸ்வரன்,சுப்பிரமணியன்,

ராமராஜ், கஜேந்திரன், மோகன்ராஜ், அப்துல் ரஹீம், அறங்காவலர்கள் வீரபாண்டியன், சுந்தர்ராஜ், பூவையா, அழகப்பபுரம் கணேசன், நகர நிர்வாகிகள் பால்ராஜ், ராம்துரை, சபரி சங்கர், சன் ராஜா, இசக்கி ரவி,

நெல்லை மேற்கு மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி,தகவல் தொழில் நுட்ப பணி அமைப்பாளர் பிரேம் ஆனந்த்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் கூறியதாவது.

**கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன்!**

இந்த தேர்தலில் என்னை 10,000, க்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்கு சேகரிக்கும் போது பொதுமக்களிடம் வாக்குறுதிகளை கூறி இல்லந் தோறும் சென்று வாக்கு சேகரித்தேன்.வெற்றி பெற்றுள்ளேன் குறைகளை தேடி வந்து கேட்டு நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தேன்.கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் கொடுக்கலாம் நிறைவேற்றிக் கொடுப்பேன்.மக்கள் குறைகள் உங்கள் கவனத்திற்கு வந்தாலும் அதனை நீங்கள் என்னிடம் தெரிவிக்கலாம் அந்தப் பிரச்சினையும் தீர்த்து வைக்கப்படும்.

**கட்சிப் பாகுபாடு இன்றி செயல்படுவேன்!**

பத்திரிகையாளர்கள்,மக்களுக்கும் எங்களுக்கும் பாலமாக இருக்க வேண்டும். நிறைவு குறைவு எதுவாக இருந்தாலும் தெரிவிக்கலாம். தி.மு.க. என்பது சொன்னதை செய்யும் கட்சியாகும். அதனால் கட்சிப் பாகுபாடு இன்றி செயல்படுவேன்.மேலும் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஊத்துமலை, சுரண்டை, பாவூர்சத்திரத்திலும்,ஆகிய பகுதிகளில் சட்டமன்ற கிளை அலுவலகம் திறக்கவுள்ளோம். பொது மக்கள் அங்கு வந்து தங்களின் குறைகளை தெரிவிக்கலாம். கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றிட நடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார்.




தென்காசி நகர தி.மு.க. சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்.103வது பிறந்தநாள் தென்காசி சட்டமன்றத் தேர்தலில் நகரப் பகுதியில் அதிகமான வாக்களித்த மக்களுக்கு நன்றி அறிவிப்பு கூட்டம்.15.06.026. ஞாயிற்றுக்கிழமை கொடிமரம் பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு நகரக் கழகச் செயலாளர் ஆர்.சாதிர் தலைமை வகித்தார். மாவட்டப் பிரதிநிதி மு.ரஹ்மத்துல்லா வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக பொறுப்பாளர் வே.ஜெயபாலன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணிஸ்ரீ, கழக வழக்கறிஞர் ஆலிம் அல் புகாரி சிறப்புரையாற்றினார்கள். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நகரக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர்கள் திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர். முடிவில் வார்டு செயலாளர் மைதீன் நன்றி தெரிவித்தார்.




தொ.மு.ச. முன்னாள் பேரவைத் தலைவரும், பேரூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான பேரூர் ஆ.நடராசன் அவர்களின் 9ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை தமிழ்ச்செல்வன் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் (தொ.மு.ச.) நா.தமிழ்ச்செல்வன், மாவட்ட தொழிற்சங்க செயலாளர் (சிடிசி) துரை, மாமன்ற உறுப்பினர் மரியராஜ், தொழிற்சங்க கவுன்சில் தலைவர் ராக்கிமுத்து, பேரவை செயலாளர் கா.பிரபாகரன், பெரியசாமி, அப்பாவு, சந்திரசேகர், ரங்கநாதன், பொருளாளர் ராதாகிருஷ்ணன், பகுதிக் கழகச் செயலாளர் டெம்போ சிவா உள்பட கழக நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.